7th April 1960]

Manufacture of glass bangles

*602 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கண்ணாடியிலே வளையல்கள், மாலைகள், விளையாட்டுச் சாமான்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் பயிற்சி கொடுப்பதற்காக மதுரையிலும், தஞ்சாவூரிலும், நெடுமாரத்திலும், கிண்டியிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றிலும் இது வரைக்கும் எத்தனை பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இவர்களுள் எத்தனை பேர்களுக்குத் தொழில்களை ஆரம்பிப்பதற்காக எத்தனை ரூபாய்கள் மான்யமாகவும், கடனாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) There is no Training Centre for glass industry at Thanjavur. Departmental Training Centres for glass industry have been set up at Madurai, Nedumarathy and Guindy. The other particulars required are furnished in the statement [a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜை மீது வைத்திருக்கும் குறிப்பில், மதுரையில் மாத்திரம் இண்டஸ்டிரியல் கோவாபரேடிவ் ஏற்படுத்த யோசனை இருப்பதாகக் கண்டிருக்கிறது. கிண்டியிலேயும் 85 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறுகிறார்கள். அங்கும் ஒரு கோவாபரேடிவ் ஏற்படுத்த சர்க்கார் பரிசீலனை செய்யுமா ? அதுபற்றி என்ன அபிப்பிராயம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது மதுரையில் மாத்திரம்தான் ஆரம்பிக்கப் போகிறோம்.

SRI A. VEDARATHNAM : இந்தக் கண்ணாடித் தொழில் தஞ்சை ஜில்லாவில் ஆரம்பிக்க வேண்டும் என்று விண்ணப்பம் வந்ததா ? அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றித் தகவல் இல்லை.

SRI K. B. S. MANI : சார், இந்த கண்ணாடித் தொழில் சம்பந்தமாக தனிப்பட்டோருக்குக் கொடுத்திருக்கும் லைசென்சு கோட்டா, தவறான பாதையில் உபயோகப்படுத்தப்படுகிறது என்ற குறைபாடு சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றித் தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : இந்தத் தொழிலில் பயிற்சியடைந்து அபிவிருத்தியடைய நெடுமார்த்தியில், எலெக்ட்ரிக் பர்னஸ் வசதிகள் தேவை என்று சர்க்காருக்கு தாக்கீது வந்ததா ? அது கவனிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருக்கிற வசதிகளை வைத்துக் கொண்டுதான் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மின்சாரம் அதிகமாக விஸ்தரிக்கப்படும்போது நெடுமார்த்திக்கும் வரும். அப்பொழுது அந்த முறையில் இந்தப் பயிற்சி நிலையங்களை விருத்தி செய்யலாம்.

---

[a] Printed as Appendix II on page 150 infra.